[21st January 1965

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அந்தக் குறிப்புகளெல்லாம் சப்ளிமெண்டரி எஸ்டிமேட்டிலே போட்டு அச்சடித்துக் கொடுத்திருக்கிறோம். அதிலே பார்த்துக்கொள்ளலாம்.

சிமெண்ட் தொழிற்சாலை

***45 கேள்வி—திரு. கரு. சீமைச்சாமி (திரு. ம. கமலநாதன் சார்பில்):** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வடசேலம் மாவட்டத்தில் சிறிய அளவில் சிமெண்ட் தொழிற்சாலை ஆரம்பிக்கும் உத்தேசம் உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இல்லை.

திரு. கரு. சீமைச்சாமி: இராமேசுவரம், தனுஷ்கோடிப் பகுதியில். . . .

கனம் சபாநாயகர் : வடசேல மாவட்டத்தில் சிமெண்ட் தொழிற்சாலை வைப்பதற்கும், இராமேசுவரத்திற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது?

திரு. கரு. சீமைச்சாமி: இராமேஸ்வரம், தனுஷ்கோடிப் பகுதியில் கடலுக்கடியில் இருக்கும் நுரைச் சங்குகளை (கோரல் ரீஃப்) தோண்டியெடுத்து துலுக்கப்பட்டி சிமெண்ட் தொழிற்சாலைக்கு கொண்டு போகிறார்கள். கடலுக்கடியில் அந்த 'ரீஃப்' இருப்பதால் அலைகள் வந்தால் தடுக்கக்கூடிய சக்தி அதற்கு இருக்கும் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, இனிமேலாவது அந்த ரீஃப்களைத் தோண்டியெடுத்துப் போகாமல் தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் அங்கத்தினர் சொல்கிற கருத்து சரியா, தவறு என்றே எங்களுக்குத் தெரியாது. யாரோ வழிப்போக்கன் கடலிலேயிருக்கும் கோரல் ரீஃப்பைத் தோண்டியதால் அலை வந்துவிட்டது என்றால், அதையெல்லாம் பார்த்து சர்க்கார் நடவடிக்கை எடுப்பதாயிருந்தால் சர்க்காரே நடத்த முடியாது.

திரு. கே. ஏ. மதியழகன் : இராமேசுவரம் தீவில் தனியார் துறைக்கு சிமெண்ட் தொழிற்சாலை ஒன்றுக்குக் கொடுக்கப்பட்ட லைசென்ஸ் அப்படியே இருக்கிறது. தொழிற்சாலை நடைபெறாமல் இருக்கிறது. அந்தப் பகுதியில் சமீபத்தில் ஏற்பட்ட புயல் கொந்தளிப்பை அனுசரித்து, இராமேஸ்வரம் அருகில் பொதுத்துறையில் அந்தத் தொழிற்சாலையை நிறுவுவதற்கு மத்திய திட்டக் கமிஷனை நமது தொழிலமைச்சர் வற்புறுத்துவார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இராமேசுவரம் லைசென்ஸை சர்க்கார் எடுத்து நடத்துவதாக உத்தேசம் இல்லை.